பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 06 செவ்வாய்க்கிழமை 21.12.2021 கதிர் 274

## பால்மா விலையிலும் மீண்டும் அதிகரிப்பு

சந்தையில் தொடர்ந்து பால்மாவுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனவும், எதிர்காலத்தில் பால்மா விலையில் மீண்டும் மாற்றம் ஏற்படலாம் எனவும் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினை ☞ 2

# ஒன்றுபட்ட தமிழ்ப் பேசும் தரப்புகளின் ஆவணத்துக்குப் பூர்வாங்க இணக்கம்!

## தலைவர்களின் இன்றைய கூட்டத்தில் கிட்டியது

(ந.லோகதயாளன்)

கொழும்பு,டிசெம்பர் 21

தமிழ்ப்பேசும் தரப்புக்களின் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் கடிதம் ஒன்றை – ஆவணத்தை இந்திய பிரதமருக்கு அனுப்புவது தொடர்பான முன் முயற்சியில் தமிழ் பேசும் தரப்புக்களின் தலைவர்களிடையே ஓர் இணக்க நிலை ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆவண வடிவம் தொடர்பில் பூர்வாங்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இன்று கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டல் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்ப்பேசும் தரப்புக்களின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த பூர்வாங்க இணக்கம் ஏற்பட்டது. ☞ 2



## சாதகமான பதில் கிடைக்காமையால் பணிப்புறக்கணிப்புப் போர் தொடரும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

சுகாதார அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காமையால் அரச வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடரும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் நாடளாவிய ரீதியாகவுள்ள வைத்தியசாலைகளில் ☞ 2

## ஜனாதிபதி நினைத்தால் அமைச்சரவை மறுசீரமைப்பு

### டலஸ் கூறுகின்றார்



தற்போதைய அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா என எம்மால் எதுவும் கூற முடியாது. அது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் ☞ 2

## நேற்று கைதான 13 இந்திய மீனவர்களில் 12 பேருக்கு மறியல்; சிறுவன் விடுதலை!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், நேற்று கைதுசெய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களில் 12 பேரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களில் ஒருவர் 14 வயது சிறுவன் என்பதால், அவரை ☞ 2



## தமிழரசு எஸ்.ரி.ஆர். பிரிந்தார்

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் முன்னைநாள் பொருளாளரும், கட்சியின் மூத்த பிரமுகருமான 'எஸ்.ரி. ஆர்' என்று ☞ 2

## காரைநகர் பிரதேச சபையின் 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் விசேட அமர்வு இன்று தவிசாளர் மயிலன் அப்புத்துரை தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரினால் 2022 ஆம் ☞ 2

## முன்னணியின் இரு உறுப்பினர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கம்

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இருவரை உடனடியாகக் கட்சியை விட்டு நீக்குகிறேன் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பரமானந்தம் தவமணி மற்றும் காரைநகர் அமைப்பாளர் கணபதிப்பிள்ளை நிமலதாசன் ஆகிய இருவருமே கட்சியை விட்டு நீக்கப்படுகின்றனர் என அவர் கூறினார். ☞ 2



## அரசுக்கு எதிராக விவசாயிகள் வயலில் நின்றவாறு போராட்டம்

(ந.லோகதயாளன்)

அரசால் வழங்கப்பட்ட திரவ உரத்தால் தமக்கு எந்தவிதப் பயனும் கிடைக்கவில்லை என வட்டக்கச்சி இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாயிகள் வயலில் நின்று இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாய அமைச்சரே எமது இந்த அவலத்தை திரும்பிப் பார்த்து நடவடிக்கை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பால்மா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம் மற்றும் களஞ்சியசாலைகளின் கட்டண அதிகரிப்பு போன்ற காரணங்களால் பால்மா இறக்குமதியில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என அதன் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றுபட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைக்கப்பட்ட எல்லா தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றியமை சிறப்பம்சம். புளொட் சார்பில் சித்தார்த்தன் தமக்குப் பதிலாக ஆர்.ராகவனை அனுப்பியிருந்தார். இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தமது சார்பில் அமீர் அலியை அனுப்பியிருந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நிசாம் காரியப்பரும் பங்குபற்றினார்

கூட்டத்துக்கு தமிழ் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தலைமை வகித்தார். அவருடன் சுமந்திரனும் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்.

ஏற்கனவே இக்கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் 2 பக்க நகல் ஆவணமொன்றை இன்று கூட்டத்தில் ரெலோ கையளித்திருந்த நிலையில், அந்த நகல் ஆவணத்தை ஏற்பதற்கு தமிழரசுத் தரப்பு மறுத்தது. தமிழரசு தரப்பினால் 8 பக்க நகல் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், மற்றைய நகலின் சில விடயங்களை (3 பந்திகளை) இந்த நகலில் சேர்த்துக் கொள்வதற்கான இணக்கம் காணப்பட்டது. இந்நிலையில் வயதில் மூத்த தலைவர்கள், கூட்டத்திலிருந்து வெளியேற எஞ்சியோர் ஒன்றிணைந்து தொடர் கலந்தாலோசனைகளில் ஈடுபட்டனர். அதனடிப்படையில் இரண்டு ஆவணங்களையும் ஒன்றிணைத்து புதிய நகல் வடிவத்தை தயாரிப்பதில் இன்று மாலை முழுவதும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் ஈடுபட்டிருந்தனர்.

சுமந்திரன், மனோ கணேசன், நிஸாம் காரியப்பர், செல்வம், குருசாமி சுரேந்திரன், ஸ்ரீகாந்தா, மாவை ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். இன்று மாலை 6 மணி அளவில் நகல் வடிவதற்கான பூர்வாங்க இணக்கம் எட்டப்பட்டது.

தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ள 8 விடயங்களையும் இணைப்பாகச் சேர்ப்பதற்கும், அத்தோடு இன்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களையும் (3 பந்திகளை) ஒன்றிணைத்து, புதிய நகல் வடிவத்தை தயாரிக்கும் பொறுப்பு தமிழரசின் பேச்சாளர் சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அது தயாரிக்கப்பட்டதும் அதனை அவர் எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பி வைப்பார். அவையும் அவற்றை ஆராய்ந்து சம்மதித்த பின்னர், அது பகிரங்கப்படுத்தப்படுவதோடு, அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து அதில் ஒப்பமிடவும் அதனை இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது, 2022ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவை மாற்றம் குறித்து சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.

மாற்றம் பற்றி எமக்கு உறுதியாக கூற முடியாது.

அரசமைப்பின் பிரகாரம் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவர் நினைத்தால் மறுசீரமைப்பு செய்யலாம் - என்றார்.

## சாதகமான பதில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்புறக்கணிப்பில் ஈடுபட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமை உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

## தமிழரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அன்பாக அழைக்கப்படும் எஸ். தியாகராஜா இன்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 92.

வாழ்நாள் முழுவதும் தமிழரசுக் கட்சியின் பெருந்தூணாக விளங்கிய தொழிலதிபர் அவர்.

யாழ்ப்பாணம் (ராஜா), வவுனியா (வசந்தி), திருகோணமலை (சரஸ்வதி), மட்டக்களப்பு (சாந்தி) தியேட்டர் உரிமையாளரான அவர் தந்தை செல்வா முதல் கொண்டு அனைத்துத் தமிழரசுக் கட்சித் தலைவர்களோடும் ஆத்மார்த்தமான நெருக்கத்தோடு பழகியவர். சிறுவயதில் மிகக் கீழ்மட்டத்திலிருந்து, தமது கடும் உழைப்பால் சமூகத்தில் உயர்ந்தவர். எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

## நேற்று கைதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடனடியாக விடுதலை செய்ய மன்று உத்தரவிடப்பட்டது.

இருந்தபோதிலும், தனியே செல்ல சிறுவன் அச்சம் வெளியிட்டுள்ளமையால், அவரை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யும் வரை சிறுவனை சிறைச்சாலையில் பராமரிக்க ஏற்பாடு செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## காரைநகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக்கப்பட்டது.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில், குறித்த வரவு-செலவுத்திட்டத்துக்குச் சுயேச்சைக் குழுவின் 3 உறுப்பினர்கள், ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் 2 உறுப்பினர்கள் என 5 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினர் என 6 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதன் அடிப்படையில் வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் காரைநகர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால் தவிசாளரும் தனது பதவியை இழந்துள்ளார்.

நேற்றிலிருந்து 14 நாள்களுக்குள் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற வேண்டும் என்பது சட்ட ஏற்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த காரைநகர் பிரதேச சபையின் ஆட்சி அப்போதைய தவிசாளர் உயிரிழந்தமையால் கடந்த மாதம் 10ஆம் திகதி ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு வசமானது.

பின்னர் புதிய தவிசாளரால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த 8ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையால் திருத்தங்கள் செய்யப்பட்டு மீண்டும் அது இன்று சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னணியின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியும் சமூகநலன் சார்ந்தும் எடுக்கப்பட்ட முடிவான காரைநகர் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பது என்ற முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட கட்சி உறுப்பினரைக் கட்சியிலிருந்து விலக்குவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இன்று இடம்பெற்ற காரைநகர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் எதிர்த்து வாக்களித்தவர் என்பதுடன் வரவு - செலவுத்திட்டம் இரண்டாவது தடவையாகும் இம்முறை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு .....





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என அரசால் வழங்கிய திரவ உரத்தை ஏந்தி அவர்கள் வயலில் நின்றவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# எம்.பிக்களைப் பெருக்க வழி

**நமது மண்ணில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது சொந்தங்களைத் தேடி நமது உறவுகள் நடத்தும் போராட்டம் ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது நாள்களைத் தாண்டியும் தொடருகின்றது. அதற்கு ஒரு நீதி, நியாயம் கிடைக்கும் என்ற துளியளவு நம்பிக்கையும் பிறப்பதாக இல்லை.**

**அது பௌதீக நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட நமது உறவுகள் பற்றிய பிரச்சினை.**

**அது போலவே தமிழினத்துக்கு ஈழ மண்ணில் பெரும் பாதிப்பைத் தரும் இன்னொரு காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையும் ஆழமாக உண்டு. அது தமிழ் மக்களாலேயே – தமிழர் தரப்பின் அரசியல் பிரதிநிதிகளினாலேயே – இன்னமுமே சரிவரப் புரிந்து கொள்ளப்படாத ஒரு பிரச்சினையாகும்.**

**அது – இலங்கையின் வாக்காளர் பட்டியலில் இருந்து பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட பிரச்சினையாகும். இந்த விவகாரத்தின் ஆழ, அர்த்தங்களை – பரிமாணங்களை – தமிழினம் இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் பெரும் துரதிர்ஷ்டமாகும்.**

**ஒரு காலத்தில் – முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் – யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பதினொரு தமிழ் எம்.பிக்களை நாடாளுமன்றுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம். கடந்த பொதுத் தேர்தலின் போது அது ஏழாகக் குறைந்து விட்டது. இன்றைய நிலையில் ஒரு தேர்தல் நடக்குமானால் அது ஆறாகி விடும் என்பதுதான் புள்ளிவிவர நிலைமையாகும்.**

**தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அல்லது தமிழர் பிரதேசத்தின் எம்.பிக்களின் எண்ணிக்கையை இன்னும் ஐந்து அல்லது ஆறால் உயர்த்தக் கூடிய வாய்ப்பு கைவசம் இருந்தும் அதில் நாம் சிரத்தையே எடுக்காமல், பொறுப்பின்றிச் செயற்பட்டு வருகின்றோம் என்பதுதான் வேதனை கலந்த உண்மை.**

**சுமார் பத்து லட்சம் தமிழர்கள் புலம் பெயர்ந்துவிட்டமையால் கணிசமான மக்கள் பிரதிநிதித்துவத்தை எமது இனம் – எமது தாயகம் – இழந்திருக்கின்றது என்பது உண்மைதான்.**

**ஆனால் மொத்தமாக இப்படிப் புலம்பெயர்ந்த பத்து லட்சம் பேரின் மக்கள் பிரதிநிதித்துவத்தையும் நாம் இழக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களில் கணிசமானோரின் பிரதிநிதித்துவத்தை நாம் தொடர்ந்து பேண முடியும். இன்னமும் தக்க வைக்க முடியும். அது விடயத்தில் நாமும், நமது தலைவர்களும், பிரதிநிதிகளும் பொறுப்பின்றிச் செயற்படுகின்றோம் என்பதுதான் உண்மை.**

**புலம் பெயர்ந்தவர்கள், அந்தந்த நாடுகளில் பிரஜாவுரிமை பெறும் வரையில் எமது நாட்டுப் பிரஜைகளே. அவர்களின் பெயர்கள் வாக்குரிமைப் பட்டியலில் இருப்பதற்குத் தகுதியுடையதே. அதை அகற்ற முடியாது. அதுவரையில் அவர்களது வாக்கும் வாக்காளர் பட்டியலில் நீடிக்க முடியும். அவர்களுக்கும் சேர்த்துதான் மக்கள் பிரதிநிதித்துவம் கணக்கிடப்பட வேண்டும். அதே போன்று புலம் பெயர்ந்து பிற நாட்டுப் பிரஜாவுரிமையுடன், இரட்டைப் பிரஜாவுரிமையில் ஒன்றை இலங்கை குடியுரிமையாக வைத்திருப்போரின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இருக்கத் தகுதியுடையதே.**

**இந்தியக் குடியுரிமை பெறாமல் – பெறமுடியாது – என்பதாயிரத்துக்கும் அதிகமான ஈழ அகதிகளும் அவர்களின் சந்ததியினரும் கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ளனர். அவர்கள் உட்பட புலம்பெயர் தேசங்களில் அந்நாட்டு குடியுரிமை பெறாது தங்கியிருக்கும் சுமார் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இலங்கையில் தமது வாக்குரிமையைப் பேணக்கூடிய சட்டத் தகைமையுடன் இருக்கின்றனர்.**

**அவர்கள் சார்பில் இங்கு வாக்குரிமையை பதிந்து உறுதிப்படுத்துவது அப்படி ஒன்றும் சிக்கலான காரியமேயல்ல.**

**அத்தகைய விடயங்களைக் கையாள ஒரு தொடர்பகத்தை அல்லது மையத்தை சுயாதீன அலுவலகங்களாக மாவட்டம் தோறும் திறந்து செயற்படுத்தினால், உலகமெங்கும் உள்ள நம்மவர்கள் அந்த மையங்கள் ஊடாக மாவட்டச் செயலகத் தேர்தல் அலுவலகங்களுடன் ஊடாடி, தமது வாக்குரிமையைப் பதிவு செய்து, உறுதி செய்து கொள்ளலாம். அப்படி செய்தால் நமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமும் மளமளவென்று உயரும். சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.**

# பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் தலாய் லாமாவின் போதனைகள்



இலங்கை பௌத்த சங்கம் தலாய் லாமாவின் 'மகா சதிபத்தான சுத்தா' பற்றிய போதனைகளை நடத்தியுள்ளது.

இலங்கை, தாய்லாந்து, மியன்மார், இந்தோனேஷியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள மகா சங்கத்தினருக்கு, இலங்கை திபெத்திய புத்த சகோதரத்துவச் சங்கம், மெய்நிகர் வழியில் மஹா சதிபத்தான சூத்திரம் பற்றிய போதனைகளை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கை திபெத்திய பௌத்த சகோதரத்துவ சங்கத்தின் தலைவரும், சர்வதேச பௌத்த சம்மேளனத்தின் பிரதிச் செயலாளருமான கலாநிதி தமிந்த புரோனகே இதனை உறுதி செய்துள்ளார்.

இலங்கை நேரப்படி கடந்த 17 ஆம் மற்றும் 18 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் 9.30 மணி வரை மெய்நிகர் வழியில் தலாய் லாமாவின் புனித போதனைகள் நடத்தப்பட்டன

ஆசியான் தம்மதுட்ட செயற்றிட்டத்தில், இலங்கை திபெத்திய பௌத்த சகோதரத்துவ சங்கம், தாய்லாந்து, திபெத்திய புத்த மையம், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவின் புத்ததாச இந்தபன்னோ ஆவணக் காப்பகம் , தாய்லாந்தின் சுவான் மொங் பாங்கொக், இந்தோனேஷியாவின் ஸ்ரீவிஜயா மாநில பௌத்தக் கல்லூரி ஆப் டாங்கராங் மற்றும் மலேசியாவின் தேரவாடா புத்த கவுன்ஸில் ஆகியவை இணை அமைப்பாளர்களாக உள்ளன.

கலாநிதி வஸ்கடுவ மகிந்தவன்ஸ மகா நாயக்க தேரர், கலாநிதி ஒமல்பே சோபித நாயக்க தேரர், பேராசிரியர் பல்லேகந்தே இரத்தினசார அநுநாயக்க தேரர், மாதம்பகம அசாஜி அனுநாயக்க தேரர், நாரம்பனாவே ஆனந்த நாயக்க தேரர் உள்ளிட்ட இலங்கையைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட தேரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மஹாசதிபத்தான சுத்தம், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சிறந்த சொற்பொழிவு என்பதோடு கௌதம புத்தரின் மிக முக்கியமான சொற்பொழிவுகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விது நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், டிசெ. 21





விது நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைகை மொழி காணொலி வெளியீட்டு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் இடம்பெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் விது நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் விஜிதா நாகேந்திரம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சைகை மொழி காணொலி வெளியீடு, விருந்தினர் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரதமவிருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும், வடக்கு மாகாண உதவிக் கல்விப்பணிப்பாளர் (விசேட கல்வி) வி.விஷ்ணுகரன் கௌரவ வருந்தினராகவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றத்துக்கு இடையிலான ஒன்றியம் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாகவுள்ளது

## சஜித் சுட்டிக்காட்டு



நாடாளுமன்றத்திற்கு இடையிலான ஒன்றியம் கூட ஒன்பது காரணங்களுடன் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாக உள்ளது என்றும், எதிர்க்கட்சி என்ற வகையில், ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் பலமுறை கோரிக்கை விடுத்துள்ள போதும் அவர் இன்னும் சிறைப்படுத்தப்பட்டு இருக்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க திருட்டு அல்லது தவறான நடத்தைக்காக சிறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களின் உரிமைகளுக்காக அவர் எப்போதும் முன்நின்றார் எனவும் தெரிவித்தார்.

சீனி மோசடி செய்தவர்கள் இன்னும் தலைமறைவாகி உள்ளனர் என்றும், தேங்காய் எண்ணெய் மோசடி செய்தவர்கள் தலைமறைவாக உள்ளனர் என்றும், வெடிக்கும் எரிவாயு மோசடியில் ஈடுபட்ட அனைவரும் தலைமறைவாக உள்ளனர் என்றும், உர மோசடியில் ஈடுபட்ட அனைவரும் தலைமறைவாகி உள்ளனர் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் சார்பாக உண்மையைக் கூறிய ரஞ்சன் ராமநாயக்க மாத்திரமே சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

மக்கள் சார்பான மனிதாபிமான பிரமுகராக அறியப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, சமூக சேவைக்காக அவரை விடுவிக்குமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக மீண்டும் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிடுவதற்காக திங்கட்கிழமை காலை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# மலேசியாவில் மழை வெள்ளம் 22 ஆயிரம் பேர் இடப்பெயர்வு

மலேசியாவில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் அதிகமாக ஏற்பட்டுள்ளது.

மலேசியாவில் கடந்த சில நாள்களாக கன மழை பெய்து வருகிறது. அதன்படி கடந்த வெள் ளிக்கிழமை மிகவும் அதிகமான கனமழை கொட்டி தீர்த்தது. இதன்காரணமாக சாலைகளில் நீர் தேங்கியது. மேலும் 6 இடங்களில் தண்ணீர் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடியது.

இதன்காரணமாக அங்கு தாழ்வான பகுதி களில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இதையடுத்து சுமார் 22 ஆயிரம் பேர் வரை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

குறிப்பாக நாட்டின் மிகவும் பணக்கார பகுதி யான செலன்கூரில் இருந்து சுமார் 5 ஆயிரம் பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இவை தவிர பல்வேறு இடங்களில் சாலைகளி லும் மழை நீர் ஓடியுள்ளது. அதேபோல் மலேசியா வின் பஹாங் பகுதியிலும் சுமார் 10 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெள்ள பாதிப்பு தொடர்பாக மலேசிய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

மேலும் அரசின் தகவலின் படி மத்திய பகுதி யில் உள்ள 6 இடங்கள் மழை காரணமாக தீவிர மாகபாதிக்கப்பட்டுள்ளனஎனதெரிவிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் பகுதியில் பொது போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் வர்த்தக நகரமான கிளாங்கிலும் கப்பல் போக்குவரத்து உள்ளிட்டவை தடைப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் அரசு சார்பில் நிவாரண பணிகள்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அத்துடன் தண்ணீரை வெளியேற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.



மலேசியாவில் எப்போதும் ஆண்டின் இறுதி யில் பருவமழை தீவிரமாக பெய்யும். ஒரு சில இடங்களில் மழை நீர் சூழ்ந்து வெள்ளம் ஏற்படும். அந்தவகையில் இந்தாண்டும் பருவமழை சற்று அதிகரித்துள்ளது. இதன்காரணமாக பல்வேறு இடங்களில் மக்களை வெளியேற்றும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

## ஜப்பானில் மூவருக்கு இன்று மரண தண்டனை நிறைவேற்றம்

மரண தண்டனைக் கைதி கள் மூவருக்கு ஜப்பானில் இன்று செவ்வாய்க்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட் டது. கடந்த 2019ஆம் ஆண்டுக் குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை இதுவாகும்.

அத்துடன், ஜப்பானில் கிஷிடா - கியோடா பிரதமராக பதவி ஏற்றபின் வழங்கப்படும் முதல் மரண தண்டனை இதுவாகும்.

நீதி அமைச்சர் யோஷிஹிசா பூருகாவா உத்தரவின் அடிப் படையில் மூவரும் இன்று தூக் கிலிடப்பட்டனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் தூக்கிலிடப்பட்ட வர்களின் பெயர், விவரங்கள் உடனடியாக தெரிவிக்கப்பட வில்லை. இன்று செய்தியாளர் சந்திப்பை நடத்த உள்ள நீதி அமைச்சர் இது குறித்து மேல திக விவரங்களை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதியே இதற்கு முன்னர் இறுதி யாக மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரை கொலை செய்த குற்றவாளியே அப்போது தூக்கிலிடப்பட்டார்.

மரணதண்டனைக்கு எதிராக ஜப்பானிலும் சர்வதேச அளவில் மனித உரிமை அமைப்புக்கள் குரல்கொடுத்துவருகின்றபோதும், கடுமையான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கும் அரசின் முடிவுக்கு பொதுத் தளத் தில் ஆதரவு உள்ளமை குறிப் பிடத்தக்கது.

## மடகஸ்கார் கடற்கரையில் படகு மூழ்கி 17 பேர் சாவு

மடகஸ்காரின் வட-கிழக்கு கடற்கரையில் நேற்று திங்கட் கிழமை பயணிகள் படகு ஒன்று மூழ்கியதில் 17 பேர் உயிரி ழந்துள்ளனர். மேலும் கடலில் மூழ்கிய 68 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்த 130 பய ணிகளில் 45 பேர் மீட்கப்பட்ட னர் எனவும், உள்ளூர் தன்னார் வலர்களின் உதவியுடன் மற் றவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்றுவருகின்றனஎனவும் துறைமுக அதிகார சபைத் தலை வர் ஜீன் எட்மண்ட் ராண்ட்ரியான் டெனைனா தெரிவித்தார்.

சரக்குக் கப்பல் ஒன்றில் சட்ட விரோதமாக பயணிகளை ஏற்றிச் சென்றபோதே அது மூழ்கி இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பல் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினையால் அது கடலில் தத்தளித்தது. பின்னர் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்து அது மூழ்கியிருக்கலாம் என மற் றொரு துறைமுக அதிகாரசபை அதிகாரியான அட்ரியன் பேப் ரைஸ் கூறினார்.



## சிலியின் இள வயது ஜனாதிபதியாகிறார் கேப்ரியல்

சிலியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் போது முக்கியத்துவம் பெற்ற இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர் கேப்ரியல் போரிக், நாட்டின் அடுத்த ஜனாதி பதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளார்.

கிட்டத்தட்ட 99 சதவீத வாக்குச் சாவடிகளில், கேப்ரியல் போரிக் 56 சதவீத வாக்குகளைப் பெற் றார். அவரது பழமைவாத எதி ராளியான ஜோஸ் அன்டோ னியோ காஸ்டுக்கு 44 சதவீத வாக்குகள் கிடைத்தன.

35 வயதில், போரிக் சிலியின் இளைய ஜனாதிபதியாக பதவி யேற்க உள்ளார். அவர் மார்ச் மாதம் பதவியேற்பார்.

வெளியேறும் ஜனாதிபதி செபாஸ்டியன் பினேரா, ஒரு பழமைவாத கோடீஸ்வரர். மூன்று மாத மாற்றத்தின் போது தனது அரசாங்கத்தின் முழு ஆதரவை வழங்குவதற்காக போரிக் உடன் காணொலிவாயிலாக மாநாட்டை நடத்தினார்.

போரிக் பினேராவுடன் சுருக் கமான தொலைக்காட்சி தோற் றத்தில், 'நான் அனைத்து சிலி யர்களுக்கும் ஜனாதிபதியாகப் போகிறேன். இந்த மகத்தான சவாலை சமாளிக்க நான் என் னால் முடிந்த அனைத்தையும் செய்யப் போகிறேன்' என கூறினார்.

சிலியின் தெற்கில் உள்ள அரினாஸைப் பூர்வீக மாகக் கொண்ட போரிக் ஒரு மாணவராக சாண்டியா கோவில் உள்ள சிலி பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் கூட்டமைப்பை வழிநடத்தி னார். அவர் 2011இல் மேம் படுத்தப்பட்ட மற்றும் மலிவான கல்வியைக் கோரி முன்னணி போராட்டங்களை முன்னெடுத் தார்.

2014 வாக்கில், இன்னும் தனது 20களில், அவர் தேசிய காங்கிரஸில் கீழ் -சபை சட்ட மன்ற உறுப்பினராக சேர்ந்தார். சிலியின் பரந்த மற்றும் குறைந்த மக்கள்தொகை கொண்ட தெற் குப் பகுதியான மாகலன்ஸை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

இந்த ஆண்டு பிரச்சாரத்தில்,



ஜெனரல் அகஸ்டோ பினோ சேயின் 1973-1990 சர்வாதி காரத்தால் விட்டுச் சென்ற நவ தாராளவாத பொருளாதார மாதி ரியை 'புதைக்க' அவர் உறுதி யளித்தார். மேலும் சமூக சேவை களை விரிவுபடுத்தவும், சமத் துவமின்மையை எதிர்த்துப் போராடவும் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பை அதிகரிக்கவும் 'சுப்பர் பணக்காரர்' மீது வரிகளை உயர்த்தவும் உறுதியளித்தார்.

## சொந்த செலவில் விண்வெளி சென்ற ஜப்பானியர் நேற்று பூமி திரும்பினார்!

சொந்த செலவில் விண் வெளி சென்ற ஜப்பானைச் சேர்ந்த மிகப்பெரும் கோடீஸ்வரரான யுசாகு மெசாவா சோயுஸ், பத்திர மாக பூமி திரும்பியுள்ளார்.

இதன்மூலம் 12 ஆண்டு களுக்கு பின் சொந்த செல வில் விண்வெளிக்கு சென்ற முதல் நபர் என்ற பெரு மையை 46 வயதான யுசாகு மெசாவா, பெற்றார்.



மெசாவாவுடன் அவரது உதவியாளர் யோசோ ஹிரானோ என்பவரும் அலெக்சாண்டர் மிசுர்கின் என்ற ரஷ்ய விண்வெளி வீரரும் கடந்த 8ஆம் திகதி எம்20 என்ற ரஷ்ய விண்கலம் மூலம் விண்வெளிக்கு சுற்றுலா சென்றனர்.

12 நாள்கள் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தங்கியிருந்த யுசாகு மெசாவா உள்ளிட்ட 3 பேரும் அதே சோயுஸ் எம்20 விண்கலத்தில் நேற்று முன்தினம் இரவு பூமிக்கு புறப்பட்டனர்.

இந்த விண்கலம் ரஷ்ய நேரப்படி நேற்று (திங்கட்கிழமை) காலை 06:16 மணிக்கு கஸகஸ்தான் நாட்டின் தென்கிழக்கில் உள்ள பாலைவன பகுதி யில் பத்திரமாக தரையிறங்கியது.

# தேர்தல் சீர்திருத்த பிரேரணை மக்களவையில் நிறைவேற்றம்

வாக்காளர் அடையாள அட்டையுடன், ஆதார் எண்ணை இணைப்பது உள்ளிட்டவற்றுக்கு அனுமதியளிக்கும் தேர்தல் சீர்திருத்த பிரேரணை இந்திய மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.


வாக்காளர் ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்ற நிலையை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தேர்தல் சட்டங்கள் திருத்த பிரேரணை கொண்டு வரப்படுவதாக இந்திய அரசு அறிவித்திருந்தது. வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான இந்த பிரேரணையை அமைச்சர் கிரண் ரிஜிஜு மக்களவையில் தாக்கல் செய்தார்.

எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது எழுந்த அமளியால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பிரேரணை நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பும்படி காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் வலியுறுத்தியிருந்தன. இந்தநிலையில் குறித்த தேர்தல் சீர்திருத்த பிரேரணை மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலமாக நிறைவேற்றப்பட்டது.



## பூஸ்டர் தடுப்பூசி செலுத்த அனுமதி தேவை டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கோரிக்கை

டெல்லியில் பொதுமக்களை கொரோனாவுக்கான பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என இந்திய மத்திய அரசை அந்த மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கேட்டுக்கொண்டுள்ளார்.



டெல்லியில் கொரோனா தொற்று கடந்த சில நாள்களாக திடீரென அதிகரித்துள்ளது. ஒமிக்ரோன் தொற்றால் மட்டும் 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக டெல்லி துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், பல்வேறு துறை உயரதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதற்குப்பின் தகவல் வழங்கிய டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், தங்கள் மாநிலத்தில் இரு தவணைத் தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டவர்கள் மூன்றாவது தவணையாக பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என மத்திய அரசிடம் கோரியுள்ளேன் எனத் தெரிவித்தார்.

மேலும் இனி புதிதாக பதிவாகும் அனைத்து கொரோனாத் தொற்றுகளும் ஒமிக்ரோன் வகையைச் சேர்ந்ததா என ஆய்வு செய்யப்படும் என்றும் முதலமைச்சர் கெஜ்ரிவால் தெரிவித்தார்.

## ஓ.பி.எஸ். கூறிய கதை சசிகலாவுக்கு பொருந்தாது முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கருத்து

மனித குலம் தோன்றியது முதல் தவறிழைத்தல் இயல்பு. ஆனால் திருந்தி வாழ்வது மனித குலத்தின் சிறப்பு. சசிகலாவிற்கு மன்னிப்பே கிடையாது என்பதில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும் உறுதியாகவே இருக்கிறார் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.க. சார்பில் சென்னை சேத்துப்பட்டில் உள்ள முதியோர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், சிறுபான்மையினரை உணர்வுபூர்வமாக நேசிக்கும் இயக்கம் அ.தி.மு.க.தான். பாபர் மசூதி இடிப்பை தொடர்ந்து இந்தியாவில் சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டனர். அப்போது ஜெயலலிதா அரசு தமிழகத்தில் முழுமையான பாதுகாப்பு வழங்கி சிறுபான்மையினரைக் காத்தது.


மனம் திருந்தியவர்களை ஏற்பதே தலைமைக்கு அழகு, என்று ஓ.பி.எஸ். கூறிய கதைக்கு கண், காது, மூக்கு வைத்து உருவம் கொடுக்காதீர். அந்த கதை பாமரர்களுக்கே பொருந்தும். சசிகலாவுக்கு பொருந்தாது.



சசிகலா இணைப்பு குறித்த அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் பா.ஜ.கவின் அண்ணாமலை கருத்துக் கூறக்கூடாது. அவ்வாறு கருத்துக் கூறினால் அது தவறு, என்று தெரிவித்திருக்கிறார்.

உதயநிதி, இன்பநிதி, சபரீசன், கனிமொழி பெயர்களில் வளாகங்களை தி.மு.க. புதிதாக உருவாக்கிக் கொள்ளட்டும். ஆனால், ஜெயலலிதா பெயரில் உள்ள கட்டடப் பெயரை மாற்ற வேண்டாம் என்றும் கூறிய அவர், அ.தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையாக வருமான வரிச் சோதனை நடத்தப்படுகிறது, என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## ஆறுமுகசாமி ஆணையத்திற்கு மருத்துவர்களை தேர்வு செய்க!



ஆறுமுகசாமி ஆணையத்திற்கு உதவுவதற்கான மருத்துவக் குழுவிற்கு புதிதாக மருத்துவர்களைத் தேர்வு செய்ய எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநருக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

விசாரணையிலிருந்து விலக்கு அளிக்கக்கோரிய அப்போலோவின் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், அதன் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் குறித்து சாட்சியங்களிடம் விசாரிக்க விரும்பினால் விசாரிக்கலாம் எனவும் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஆறுமுகசாமி ஆணையம் தொடர்பாக அப்போதைய நிர்வாகம் தொடர்ந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து மனுக்களும் முடித்து வைக்கப்பட்டுள்ளதென உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதோடு, ஜெயலலிதாவுக்கு என்னென்ன சிகிச்சை அளிக்கப்பட்டதோ, அந்தத்துறை சார்ந்த நிபுணர்களைப் பரிந்துரைக்கவும் எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநருக்கு அறிவுறுத்தியுள்ளது.

## அமுலாக்கத்துறை விசாரணைக்கு நேரில் ஆஜரானார் ஐஸ்வர்யா ராய்



கடந்த 2016 ஆம் ஆண்டில் பனாமா பேப்பர்ஸ் நிறுவனத்தின் ரகசிய ஆவணங்கள் வெளியாகியிருந்தன. இதில் இந்தியாவைச் சேர்ந்த அரசியல், சினிமா, வர்த்தகம், மற்றும் விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த பிரபலங்கள் ஐநூறுக்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளில் சட்டவிரோதமாக சொத்துகளை வாங்கி குவித்துள்ளது தெரிய வந்தது. நடிகர் அமிதாப் பச்சன் குடும்பத்தினரின் பெயரும் அந்தப்பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

பிரிட்டனுக்கு சொந்தமான வெர்ஜியன் தீவில் செயல்பட்டு வரும் நிறுவனம் ஒன்றில் அமிதாப்பின் மருமகளும் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் சட்டவிரோதமாக முதலீடு செய்துள்ளார் என புகார் எழுந்தது. இது தொடர்பாக விளக்கம் அளிக்கக்கோரி சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அமுலாக்கத்துறை சார்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. 2 முறை அழைப்பாணை அனுப்பப்பட்ட போதும், அவர் தமக்கு கால அவகாசம் கோரியதுடன் விசாரணைக்கும் ஆஜராகவில்லை.

இந்த நிலையில் மூன்றாவது முறையாக நடிகை ஐஸ்வர்யா ராய்க்கு அமுலாக்கத்துறை அழைப்பாணை அனுப்பியது. அதன்படி, டெல்லியில் உள்ள அமுலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜரான ஐஸ்வர்யா ராயிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது தன் தரப்பு விளக்கத்தை ஐஸ்வர்யா ராய் அளித்தார். அந்த விவரத்தை அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பு மாநகர சபை

# உத்தியோகத்தர் எனக் கூறி மோசடிகளில் ஈடுபடும் நபர்கள்

## சபையின் முதல்வர் எச்சரிக்கை

மட்டக்களப்பு மாநகர சபை பதவி நிலை சிரேஷ்ட உத்தியோகத்தர் எனக் கூறி ஒரு சிலரால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் பொருள்கள் கையூட்டாக கோரப்பட்டன என உறுதிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவண பவன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயற்பாடானது மக்களுக்கான சேவையினை தூய்மையான கரம் கொண்டு வழங்கிக் கொண்டிருக்கும் எமது மட்டக்களப்பு மாநகரசபை, மாநகரசபை உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு களங்கம் விளைவிக்கும் ஒரு செயற்பாடாகவே அமைந்துள்ளது. அந்த அடிப்படையில் நேற்றையதினம் எமக்கு கிடைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில்.

01. சிகை அலங்கார நிலையத்தில் சென்று முடிதிருத்தம் செய்து விட்டு அதற்கான கட்டணம் செலுத்தாமல் வெளிவந்தமை.

02. கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் இறைச்சி கொள்வனவு செய்த பின்னர் அதற்கான கட்டணம் செலுத்தாமல் வெளிவந்தமை.

03. வன் பொருள் விற்பனை நிலையங்களில் மின்குமிழ்கள், சீமெந்து மற்றும் கம்பிகளை பணம் செலுத்தாமல் கொள்வனவு செய்தமை.

மேற்படி சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் கூறிய காரணத்தினால் இரகசியத் தன்மை பேணப்படுவதனால் சில விவரங்களை நேரடியாக தெரிவிக்க முடியவில்லை. மட்டக்களப்பு மாநகர சபை பதவிநிலை உத்தியோகத்தர் எனக்



கூறி எவராவது கையூட்டுகள் கோரினால் அதனை நீங்கள் வழங்க வேண்டாம். தயவு செய்து எம்மிடம் குறித்த விடயம் பற்றி முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். லஞ்சம் கோரல் அல்லது பொருள் லஞ்சம் கோரல் தொடர்பாக எம்மிடம் முறைப்பாடு செய்யும் இடத்து குறித்த சட்டவிரோத நடவடிகைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை உடன் எடுக்கப்படும் எனவும் அத்துடன் லஞ்சம் கோருவோருக்கு மாத்திரம் அல்லாமல் யாரேனும் சேவை பெறுநர் அல்லது வழங்குனர் லஞ்சம் கொடுப்பின் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் குறிப்பிட்டார்.

# வடக்கு – கிழக்கு முஸ்லிம்களை பலிகொடுக்க தயாராகிறார் ஹக்கீம்

*மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவிப்பு*



*கிழக்கு மாகாண மக்கள் மீது அடிமைச் சாசனமாக எழுதப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்தக்கோரும் நடவடிக் கைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் துணை போவது முஸ்லிம் சமூகத்துக்கும்நாட்டின் இறைமைக்கும் செய்யும் துரோகமாகும். இத்துரோகத்துக்கெதிராக கிழக்கு மக்கள் விழித்தெழ வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் கலாபூஷணம் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.*

*இது பற்றி ஊடகங்களுக்கு கருத்துக்கூறிய அவர் வடக்கு கிழக்கை இணைத்து முஸ்லிம்களை அடிமையாக்கிய 13 ஆவது திருத்தத்தை எதிர்த்தே முஸ்லிம் காங்கிரஸ் வளர்ந்தது. இவ்விணைப்பின் காரணமாக 40 வீதமாக இருந்த கிழக்கு மாகாண முஸ்லிம்கள் 17 வீதமாக குறைக்கப்பட்டனர். தொழில் வாய்ப்பு, காணி போன்றவற்றில் 17 வீதத்துக்கு தள்ளப்பட்டனர். 13ஆவது திருத்தத்திற்கமைய மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டு வடக்கு - கிழக்கு சபையால் பொலிஸார் உருவாக்கப்பட்ட போது அதில் இணைந்த முஸ்லிம் பொலிஸாரை அதே வடக்கு - கிழக்கு சபையால் நியமிக்கப்பட்ட சக தமிழ் பொலிஸார் காரைதீவில் வைத்துநாற்பதுக்கும்அதிகமானோர்கொல்லப்பட்ட வரலாற்றை நாம் மறந்து விட முடியாது.*

*இலங்கையின் இனப்பிரச்சினையில் முஸ்லிம்களினதும் உடன்பாடு தேவை என இந்திய அரசு கூறியுள்ளதால் முஸ்லிம்களை ஏமாற்றி இதனை சாதித்துக்கொள்ளும் வகையில் ரவூப் ஹக்கீமை வளைத்துப்போட்டு காரியம் சாதித்துக்கொள்ள தமிழ்க் கட்சிகள் முனைகின்றன.*

*ஹக்கீம் இந்த முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுப்பதிலேயே தொடார்ந்தும் ஈடுபட்டு வந்தார். இந்த உண்மையை நாம் தொடார்ந்து சொன்ன போதும் கிழக்கு முஸ்லிம்கள் ஏமாந்த சோனகிரியாக முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களித்து ரவூப் ஹக்கீமை பலப்படுத்தினர்.*

*இப்போது முழு கிழக்கு மக்களையும், நாட்டின் இறைமையையும் இந்தியாவுக்கு காட்டிக்கொடுக்கும் மற்றொரு துரோகத்தை செய்கிறார். வடக்கு - கிழக்கு இணைப்பால் கண்டியைச் சேர்ந்த ஹக்கீமோ அவரின் உறவினர்களோ பாதிக்கப்படவில்லை. ஆனால் நாம் தான் பல உயிர்களையும், உடைமைகளையும், காணிகளையும் இழந்தோம். ஹக்கீமின் இம்முயற்சி களுக்கெதிராக கிழக்கு மக்கள் விழிப்புற்று எம்மோடு இணைந்து குரல் எழுப்ப முன்வர வேண்டும். இல்லாவிட்டால் கிழக்கு மக்கள் வடமாகாண இனவாத தமிழ் அரசியல்வாதிகளின் மேலாதிக்கத்தின் கீழ் அடிமைகளாக வாழ வேண்டி வரும் என எச்சரிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.*

# ஐஸ் வகை போதைப்பொருளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது

ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்ற ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பம் நேற்று இரவு காத்தான்குடி மத்திய மகாவித்தியாலத்தின் பின்னால் உள்ள கர்பலா வீதியில் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஐஸ் போதைப்பொருள் கடத்திய சந்தேக நபரையும் 64.286 மில்லிகிராம் பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் பைக்கற்றினையும் கைப்பற்றினர்.



காத்தான்குடி 6 ஆம் பிரிவினைச் சேர்ந்த சந்தேக நபரான 50 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் போதைப்பொருள் கடத்த பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்று பொருள்கள் யாவும் காத்தான்குடி பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினரால் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

# நித்தவூர் கபடி அணி சம்பியன்

கொழும்பு சுகதாச தேசிய விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற 33 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் தேசிய மட்ட கபடி போட்டியில் அம்பாறை மாவட்ட நிந்தவூர் கபடி அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கம், வெற்றி கிண்ணம் மற்றும் சான்றிதழ், பணப் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இப்போட்டியில் சிறந்த வீரராக நிந்தவூர் மதினா இளைஞர் கழகத்தின் கபடி வீரர் மற்றும் தேசிய கனிஷ்ட கபடி அணி வீரர் ஆகிய எஸ்.எம். பிஹானுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப் பட்டது.

# காணாமல் போயிருந்த நபர் ஆற்றில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வாகநேரியில் குளத்துமடுவில் காணாமல் போயிருந்த குடும்பஸ்தரின் சடலத்தினை வாகநேரி ஆற்றுப் பகுதியில் நேற்று மாலை வாழைச்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாடு மேய்க்கவென்று சென்றவர் வீடு வந்து சேராதமையால் உறவினர்களால் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் நேற்று மாலை குறித்த நபரின் சடலம் ஊரியன்கட்டு ஆற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குளத்துமடு வாகநேரியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான மு.செல்லத்தம்பி (வயது -56) என்பவரே இவ்வாறு உயிரிழுந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை கோறளைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வ.றமேஷ்ஆனந்தன் மேற்கொண்டார். குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு டிஜிற்றல் வழி கொடுப்பனவு சந்தை வாய்ப்பு



மட்டக்களப்பில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு டிஜிற்றல் கொடுப்பனவு முறையூடான சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

கிழக்கு பிராந்திய வியாபார தலைவர் நித்தியானந்தம் கேதீஸ்வரன் தலைமையில் நத்தார் பண்டிகையினை முன்னிட்டு இச்சந்தை வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் அபாயம் நிலவும் இச்சந்தர்ப்பத்தில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் விதமாக நத்தார் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தொடுகையற்ற பணப்பரிமாற்ற சேவை உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமையுடன் உற்பத்தியாளர்களின் பொருள்களும் சந்தைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# ஆஷஷ் தொடரின் இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலியா 275 ஓட்டங்களால் அபார வெற்றி

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் கடந்த டிசெம்பர் 8 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டியில் ஆஸ்திரேலியா அணி இங்கிலாந்தை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து கடந்த டிசெம்பர் 16 ஆம் திகதி அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் தொடங்கிய இரண்டாவது போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி, முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து, 473 ஓட்டங்களை எடுத்து தனது இன்னிங்ஸை நிறைவுசெய்தது. லபுசேன் 130, டேவிட் வோனர் 95, அணித்தலைவர் ஸ்மித் 93 ஓட்டங்களை எடுத்தனர். இங்கிலாந்து அணியின் பென் ஸ்டோக் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அதைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலந்து, 236 ஓட்டங்களை மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. டேவிட் மாலன் 80, ஜோ ரூட் 62 ஓட்டங்களை எடுத்தனர். ஆஸ்திரேலியாவின் மிட்ச்செல் ஸ்ட்ராக் 4 விக்கெட்டுக்களையும் நதன் லயொன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 230 ரன்கள் எடுத்த நிலையில் தனது இன்னிங்ஸை முடித்துக்கொண்டு, 468 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்கை இங்கிலாந்துக்கு நிர்ணயித்தது. லபுசேன், ட்ராவிஸ் கெட் இருவரும் தலா 51 ஓட்டங்களை எடுத்தனர். இங்கிலாந்தின் ஒலி ரொபின்சன், ஜோ ரூட், டேவிட் மலான் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸையும் தடுமாற்றத்துடனே ஆரம்பித்த இங்கிலாந்து 192 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழக்க, ஆஸ்திரேலியா அணி 275 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. கிறிஸ் வோக்ஸ் 44 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆஸ்திரேலியாவின் ஜை ரிச்சர்ட்சன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப் போட்டியின் நாயகனாக லபுசேன் தெரிவானார்.



இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில் 2 - 0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# பிரபல டென்னிஸ் வீரர் நடாலுக்கு கொரோனா

பிரபல டென்னிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சம்பியனான அவர், காலில் ஏற்பட்ட காயத்தால் இந்த ஆண்டு பல தொடர்களில் பங்கேற்காமல் இருந்தார்.

அவர் காயத்தில் இருந்து குணமடைந்து கடந்த மாதம் அபுதாபியில் நடைபெற்ற உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்றார். அந்தத் தொடரில் அரையிறுதிப் போட்டிவரை முன்னேறிய அவர், அன்டி மரேயிடம் தோல்வியடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் ஸ்பெயின் திரும்பிய நிலையில் தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.



இதுகுறித்து ரபேல் நடால் தனது டுவிட்டர் பக்கத்தில் தகவல் பகிர்ந்துள்ளார். அதில், ஸ்பெயினில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் எனக்கு கொரோனாத் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. அபுதாபியில் நான் தோல்வியடைந்தாலும் நீண்ட நாள்களுக்குப் பின் விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது.

என் வாழ்வில் ஏற்பட்ட பல சறுக்கல்களில் இருந்து இப்போதுதான் சிறிது சிறிதாக முன்னேறி வருகிறேன். அடுத்த ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி தொடங்கவுள்ள ஆஸ்திரேலியா ஓபன் போட்டிகளில் பங்கேற்பது குறித்து இப்போதைக்கு உறுதியாக கூற முடியாது, என்று குறிப்பிட்டிருக்கிறார்.



# இந்தியா – தென்னாபிரிக்கா கிரிக்கெட் தொடரில் மைதானத்தில் ரசிகர்களுக்கு அனுமதி இல்லை

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி அந்தநாட்டு அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. சிவப்புப் பந்துகளை பயன்படுத்தும் டெஸ்ட் விளையாட்டு போட்டிகள் செஞ்சூரியன், கேப்டவுன், மற்றும் ஜோகன்னஸ்பர்க் நகர்களில் நடைபெறவுள்ளன. இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகிற 26 ஆம் திகதி செஞ்சூரியனில் தொடங்கவுள்ளது.

இந்தநிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியாவுக்கு எதிரான போட்டிகளுக்கு மைதானத்துக்கு ரசிகர்களை அனுமதிக்கும் டிக்கெட்டுகளை வழங்காமல், வீரர்களையும் இந்த சுற்றுப்பயணத்தையும் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கொரோனா ஆபத்தைக் கருத்தில் கொண்டு இந்தச் சுற்றுப்பயணத்தில் விதிமீறல்களைத் தவிர்க்கும் பொருட்டும், ஆபத்தில்லா சூழலை பாதுகாக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக, கிரிக்கெட்டின் மிகத் தீவிர ரசிகர்களுக்கும், அனைத்து விளையாட்டுப் போட்டிப் பிரியர்களுக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்கம் வருத்தத்துடன் இதனை தெரிவித்துக் கொள்கிறது என்றும், உள்நாட்டில் கொரோனா நான்காவது அலையைக் கருத்தில் கொண்டு, இரண்டு கிரிக்கெட் சங்கங்களும் இந்தக் கூட்டு முடிவை எடுத்துள்ளன, என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆஷஷ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் வேகப்பந்துவீச்சாளர் ஸ்கொட் போலான்ட் இணைப்பு



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, ஆஷஷ் தொடருக்கான தமது அணியில் வேகப்பந்துவீச்சாளரான ஸ்கொட் போலான்டை இணைத்திருக்கின்றது.

ஆஷஷ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த டெஸ்ட் போட்டியில் இருந்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு விளையாடும் சந்தர்ப்பத்தினை ஸ்கொட் போலான்ட் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவரான பட் கம்மின்ஸ் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னர் கொவிட்-19 வைரஸ் தொற்றுக்கு ஆளாகியிருந்ததோடு, அவ்வணியின் ஏனைய முன்னணி வேகப்பந்துவீச்சாளரான ஜோஸ் ஹசல்வூட்டும் உபாதைக்கு ஆளாகியிருந்தார். எனவே, இந்த வீரர்கள் மூலம் அணியில் ஏற்படும் தளர்வுகளை ஈடுகட்டும் பொருட்டே, ஸ்கொட் போலான்டிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஸ்கொட் போலான்ட் 2018/19ஆம் ஆண்டின் பருவகாலத்திற்கான மார்ஸ் செப்பீல்ட் தொடரில் தொடர் நாயகன் விருதினை வென்றிருந்ததோடு, அதன் பின்னர் இந்த கோடைகாலத்திற்கான உள்ளூர் கிரிக்கெட் தொடரில் 2 போட்டிகளில் ஆடி 15 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இதேநேரம், அவர் அண்மையில் நிறைவடைந்த இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான போட்டிகளிலும் திறமையினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செஞ்சொற்செல்வர் திருமுருகனுக்கு தெல்லிப்பழையில் உயரிய கௌரவம்!

## அவரது மணிவிழாவை முன்னிட்டு



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் ஆகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் மணிவிழாவை ஒட்டித் “திருமுகம் 60” மலர் வெளியீடும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் விழா கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான வளாகத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் வெகு சிறப்புற நடைபெற்றது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தால், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் இந்த விழா இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் காலை 9 மணியளவில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்தில் பல்துறைசார்ந்தவர்களால் பொன்னாடைகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு ஆலயத்திலிருந்து விழா மண்டபம் நோக்கி விழா நாயகனுக்கு மங்கள வாத்தியங்களுடன் மகத்தான செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபரும் யாழ்.மகாஜனக்கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமாகிய திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் மங்கல விளக்கேற்றலுடனும், இறைவணக்கத்துடனும் விழா ஆரம்பமானது. வரவேற்புரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய உபசெயலாளரும் விவாக பிறப்பு – இறப்புப்



பதிவாளருமாகிய இ.இராதாகிருஷ்ணா நிகழ்த்தினார்.

விழாவில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க. செந்தில்ராஜக் குருக்கள், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகள் வழங்கினர்.



யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய உபதலைவர் சி.அருளானந்தசிவம், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கணக்காளர் திருமதி கேசினி கோணேஸ்வரன், சிவபூமி அறக்கட்டளையின் இணைச் செயலாளர் ம.தயாகரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் மணிவிழாவை ஒட்டித் “திருமுகம் 60” மலரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வெளியிட்டு வைக்க, விழா நாயகன் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கௌரவப் பிரதியைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா இணையவழி மூலமாக குறித்த நூலை வெளியிட்டு வைத்தார். மலரின் முதற்பிரதியை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய உபதலைவர் தேசகீர்த்தி லயன்.ச. ஆறுமுகநாதன் பெற்றுக் கொண்டார்.



தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் நூலின் வெளியீட்டுரையை மலர்க் குழு சார்பாக நிகழ்த்தினார்.

விழாவில் விசேட நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் திருமதி.கலாமதி முருகானந்தன் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் ஆகியோர் ‘‘இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது – 2021’’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து விழா நாயகன் சமயம், சமூகம்,கலை, இலக்கியம், கல்வி, மருத்துவம், ஊடகத்துறை எனப் பல்துறைசார்ந்தவர்களால் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்.

விழாவில் கலந்து கொண்ட மூத்த சிவாச்சாரியார்கள் பலரும் செஞ்சொற்செல்வரை உளமார ஆசிர்வதித்தமையையும் அவதானிக்க முடிந்தது.

விழா நாயகன் செஞ்சொற்செல்வரின் நீண்ட ஏற்புரை இடம்பெற்றது. நன்றியுரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய உப பொருளாளரும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆசிரியருமான ப.சேயோன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட பெருந்தகைகள், பல்துறைசார்ந்தவர்கள் உள்ளிட்ட பலரும் விழா நாயகனுடன் குழுப்படம் எடுத்துக்கொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதியபோசன விருந்தும் நடைபெற்றது. இந்த நிகழ்வு அவரது பிறந்ததின நாளில் இடம்பெறவிருந்து கொவிட் நிலைமைகளால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2021இல் வெளியிடப்பெற்றது.